JUDICIAL FORM NO.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXII, Cr.P.C)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW-1 Witness

for Prosecution

| CC No. | 46/2025 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| Name | Pw1 வில்சன் சகாயராஜ் | Village |
|---|---|---|
| Father's /Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of October 2025 | | |

**எதிரிகள் ஆஜர். சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் ஆனது நான் கைப்பட எழுதியது என்றால், சரிதான். எனது புகாரில் எதிரிகள் கல் எடுத்து கொலை மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ளேன் என்றாலும், அது எந்த கல் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியானது பொங்கல் பண்டிகை என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது பொதுமக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதி என்றால், சரிதான். ரோட்டிற்கு இருபுறமும் நிறைய கடைகள் உள்ளது என்றால், சரிதான். சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தில், நான் வாகன தணிக்கை எவ்வளவு நேரம் செய்து கொண்டிருந்தேன் என்றால், மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செய்து கொண்டிருந்தேன். வாகனத்தணிக்கையின் போது இந்த வழக்கைத் தவிர வேறு ஏதும் வழக்கை நான் தாக்கல் செய்தேனா என்றால், தாக்கல் செய்தேன். அது மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டி வந்தவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன். 1-ம் தேதி வாகன தணிக்கையின் போது மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டி வந்தார் என்பதற்கு, அவர் மீது வழக்கு பதிவு செய்து ஏதேனும் ரசீது கொடுத்து அதனை புகார் இணைத்து புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால், சரிதான். அது வேறு வழக்கு என்பதால் கொடுக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்வது போல் எதிரி மீது மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியதற்கு எவ்வித ரசிதும்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.10.09 06:45:34 +0530

போடவில்லை என்றாலும், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்வது போல் அவ்வாறு ஒரு சம்பவம் ஏற்பட்டிருந்தால் நான் உடனே மேற்படி ரசீது உயர் அதிகாரிக்கு புகாருடன்வைத்து கொடுத்திருப்பேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியானது பொங்கல் பண்டிகை என்பதால், அந்த சமயத்தில் மது கடைகள் அனைத்தும் மூடி இருக்கும் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்வது போல் எதிரிகள் எங்களை பணி செய்ய விடாமல் தடுக்கவில்லை என்றாலும், பொங்கல் பண்டிகை என்பதால் புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றாலும், சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால், சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Signature of Witness

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.09 06:45:43 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXII, Cr.P.C)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 2 Witness

for Prosecution

| CC No. | 46/2025 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| Name | Pw2 நாகராஜ் | Village |
|---|---|---|
| Father's /Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of October 2025 | | |

**எதிரிகள் ஆஜர். சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எத்தனை மணியில் இருந்து வாகன தணிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்தோம் என்றால், மாலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அதற்கு முன்போ அல்லது பின்போ ஏதேனும் வழக்கு பதிவு செய்தோமா என்றால், எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை. எதிரி மீது மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியதற்கு வழக்கு பதிவு செய்து அந்த ரசீது எனது உயர் அதிகாரியிடம் உதவி ஆய்வாளர் கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ரசீதை எதிரியிடம் உதவி ஆய்வாளர் கொடுத்தாரா என்றால், உதவி ஆய்வாளர் கொடுத்தார் அவர் வாங்க மறுத்து விட்டார். எதிரி மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியதற்கு இயந்திரம் மூலம் அவரை பரிசோதித்து எவ்வளவு சதவீதம் போதை அளவு இருந்தது என்று உயர் அதிகாரியிடமும் அல்லது போலீஸ் விசாரணையின் போதும் நான் கூறவில்லை என்றால், சரிதான். எதிரிகள் எந்த கல்லை காட்டி மிரட்டினார்கள் என்று எனது போலீஸ் விசாரணையில் நான் கூறவில்லை என்றால், கூறினேன். என்னை எந்த உயர் அதிகாரி இந்த வழக்கு சம்பந்தமாக எப்போது விசாரித்தார் என்றால் வில்சன் சகாயராஜ் மற்றும் காவல் ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் சிகிச்சை எடுத்துக்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.10.09 06:45:50 +0530

கொண்டேனா, என்றால் பவானி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். பவானி அரசு மருத்துவமனையில் எத்தனை நாள் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால், வெளிப்புற நோயாளியாக சிகிச்சை எடுத்து அப்போதே கிளம்பி விட்டேன். எனக்கு ஏற்பட்ட காயம் குறித்து மருத்துவர் குறித்துக் கொண்டாரா என்றால், குறித்துக் கொண்டார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியானது பண்டிகை காலம் என்றால், சரிதான். பொதுவாக பண்டிகை காலங்களில் மது கடை மூடியிருக்கும் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியானது பண்டிகை காலம் என்பதால் மதுக்கடைகள் மூடி இருக்கும் என்றாலும், சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், இந்த வழக்கின் புகார்தாரர் எனது உயர் அதிகாரி என்பதாலும், அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியில்ல. எதிரிகள் யாரும் என்னை தாக்கவில்லை என்றால், சரியில்லை.

மறு விசாரணை இல்லை.

Signature of Witness

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.09 06:45:56 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXII, Cr.P.C)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 3 Witness

for Prosecution

| CC No. | 46/2025 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| Name | PW3 மாதையன் | Village |
|---|---|---|
| Father's /Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of October 2025 | | |

**எதிரிகள் ஆஜர். சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எத்தனை மணியில் இருந்து வாகன தணிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்தோம் என்றால், மாலை 7.00 மணி முதல் இரவு 7.30மணி வரை இருக்கும். 5 மணியிலிருந்து நாங்கள் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தோம் என்று கூறினால், அது பொய் என்றால், சரிதான். எதிரிகள் வந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். நாங்கள் வாகன தணிக்கையின் போது எத்தனை வழக்குகள் தாக்கல் செய்திருப்போம் என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. எதிரி மது குடித்துவிட்டு வாகனம் ஓட்டி வந்ததாக அவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கின் ரசீதை எதிரியிடம் உதவி ஆய்வாளர் கொடுத்தாரா என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை யார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார். வேறு எங்கும் என்னை வைத்து விசாரிக்கவில்லை என்றால், சரிதான். எனது போலீஸ் விசாரணையில் எதிரிகள் எந்த கல்லை வைத்து மிரட்டினார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரியல்ல. காவல் நிலையத்தில் தான் கல் இருந்தது நான் காண்பித்தேன். நான் கல்லை அடையாளம் காட்டும்போது எதிரிகள் காவல் நிலையத்தில் இருந்தார்களா என்றால், எதிரிகள் இருந்தார்கள். நான் எப்போது எந்த

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.10.09 06:46:03 +0530

நேரத்தில் கல்லை அடையாளம் புலன் விசாரணை அதிகாரியிடம் அடையாளம் காட்டினேன் என்றால், சம்பவம் நடந்த அடுத்த நாள் அடையாளம் காட்டினேன். அப்போதும் எதிரிகள் அங்கு இருந்தனர். நான் முதல் விசாரணையில் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கு இந்த சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், நான் கல்லை அடையாளம் காட்டியதாக சொல்லப்படும் சமயத்தில் எதிரிகள் அங்கு இல்லை என்றாலும், அந்த சமயத்தில் எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்தார்கள் என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.09 06:46:08 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.